
விகடன் பிரசுரம்
யூ ஆர் அப்பாயின்டட்!
'மா ஃபா' கே. பாண்டியராஜன்

Printed Books



## 'மா ஃபா' கே. பாண்டியராஜன்

ஆங்கில தினசரிகளைப் புரட்டினால், 'மா ஃபா' (Ma Foi) வேலைவாய்ப்பு விளம்பரங்களைப் பக்கத்துக்குப் பக்கம் பார்க்கலாம். இதுவரை 27 நாடுகளில், 35,000 இளைஞர்களைக் கண்டுபிடித்து, தகுதியான வேலைகளில் அமர்த்தி இருக்கிறது 'மா ஃபா' என்ற தனியார் வேலைவாய்ப்பு நிறுவனம். இந்த நிறுவனத்தை நிறுவி, நிர்வகித்துக் கொண்டிருப்பவர் கே. பாண்டியராஜன்.

கோயம்புத்தூர் பி.எஸ்.ஜி. கல்லூரியில் கிடைத்த பொறியியல் அறிவு, XLRI-ல் எம்.பி.ஏ. படித்தபோது கிடைத்த நிர்வாகத் திறமை, பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றியபோது கிடைத்த அனுபவங்கள், காதல் மனைவியும் ஆடிட்டருமான ஹேமலதா கொடுத்த உற்சாகம், கைவசம் இருந்த அறுபதாயிரம் ரூபாய்... இவற்றை மூலதனமாக வைத்துத் தொடங்கப்பட்டதுதான் 'மா ஃபா' என்ற மனிதவள மேம்பாட்டு நிறுவனம்... பிரெஞ்சு மொழியில் 'மா ஃபா' என்றால் 'நான் கியாரண்டி' என்று அர்த்தம்!

இளைஞர்களுக்கு வழிகாட்டுவதுதான் 'மா ஃபா' கே. பாண்டியராஜனின் பிரதான லட்சியம்.